9th August 1966]

திரு. வை. சங்கரன்: இராமநாதபுரத்தில் 121 இஸ்லாம் என்ற ஒரு காலண்டர் வெளியிட்டிருப்பதைப்பற்றி—

"The State Government has prohibited the import of the Calendar 121 Islam having a map depicting Jammu and Kashmir as a separate entity and not as part of India. The calendar has been printed and published by a Litho press in Ramanathapuram district in Madras".

என்ற செய்தி 29—7—1966 பத்திரிகையிலே வந்து இருக்கிறது. அப்படிச் செய்தது இந்த லித்தோ பிரஸ் தான். அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை. இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து: இந்தப் படங்களை அச்சடிப்பதற்குத் தனியார் ஆர்டர் கொடுத்தார்களா? அல்லது சொந்தக்காரர்களே பிரசுரித்தார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பிரசுரித்ததற்கு அச்சகத்துச் சொந்தக்காரர்கள் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி: தேசப் படங்கள் அச்சடிக்கப்பட வேண்டுமென்றால் அரசாங்கத்தின் முன் உத்தரவு பெற்று பிரசுரிக்க வேண்டுமென்றிருக்கிறதா? இனிமேலாவது அம்மாதிரி முன் உத்தரவு பெறுவதற்கு உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தப் படத்திற்குச் சர்க்காரின் முன் உத்தரவு வேண்டுமென்று ஒன்றும் இல்லை.

திரு. எம். எஸ். மணி: அந்த அச்சக உரிமையாளர் உடனடியாகக் கைது செய்யப்படாததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கேஸ் போடுவதாக இருந்தால் தான் கைது செய்யவேண்டும். அதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டது.

இலஞ்ச ஒழிப்புச் சட்டம்

*246 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் இன்றுவரை நமது மாநிலத்தில் இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின்கீழ் (விஜிலேன்ஸ்) அரசாங்க உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் முறையே கைது செய்யப்பட்டு, வழக்கு தொடுத்து, தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) எத்தனை பேர்கள் இதனால் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டார்கள்?

(உ) போலீஸ் இலாகாவில் மட்டும் எத்தனை பேர் நீக்கப்பட்டார்கள்?

(எ) இந்தச் சட்டத்தை மேலும் கடுமையாக்க அரசாங்கத்துக்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(1)	Gazetted officers. (2)	Non-gazetted officers. (3)
(*a*) Number arrested ..	14	93
Number prosecuted ..	5	37
Number punished ..	2	21
(*b*) Number of persons dismissed or removed from service ..	Nil.	7 (after conviction).
(*c*) Number of persons dismissed or removed in Police Department	Nil.	Nil.

(*d*) The Central Government are concerned with this.

திரு. செ. மாதவன் : இந்தக் குற்றத்தைக் கண்டு பிடிக்கும் இந்த இலாகாவிலே போலீஸ் துறையிலிருந்து ஒருவரும் கண்டு பிடிக்கப்படவில்லை என்று கூறினார்கள். இதற்கு என்ன காரணம்? இதை ஏற்றுக் கொண்டிருப்பதே போலீஸ் இலாகா என்ற காரணமா அல்லது வேறு காரணமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த இலாகாவைப் பொறுத்த வரை போலீசாரிடத்திலே பட்சபாதம் ஒன்றும் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : போலீஸ் இலாகாவிலே பட்சபாதம் இல்லையென்று சொன்னார்கள். காவேரிப்பாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மீது நானே ஒரு புகார் விஜிலன்ஸ் கமிஷனுக்கு அனுப்பினேன். அப்படியானால் இது பட்சபாதமில்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் எந்தக் கருத்து வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளலாம்.

தமிழ் வளர்ச்சி

* 247 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்
திரு. கே. ஏ. மதியழகன் } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் ஐந்து லட்ச ரூபாய் எந்தெந்த வகையில் செலவிடப்படுகிறது ?

(இ) தமிழ் பேசப்படாத பிற மாநிலங்களில் தமிழைக் கற்றுக்கொடுக்க இம்மாநில அரசுக்கு ஆண்டொன்றுக்குச் செலவாகும் பணம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement[a] is placed on the table of the House.

(*b*) About Rs. 22,400.

---

[a] Printed as Appendix I on pages 980–981.